[1987 மார்ச் 23

திட்டக் குழு.

136—(*வினா எண் 11566)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'திட்டக்குழு'வை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) 1982 ஆம் ஆண்டு முடிவில் மாநிலத் திட்டக் குழு இறுதியாக திருத்தி அமைக்கப்பட்டது. இக்குழுவிற்கு, திட்டங்களைத் தயாரிப்பதில் தலைவருக்கு உதவியாக உதவித் தலைவர் மற்றும் உறுப்பினர் செயலாளரைத் தவிர மேலும் சில பகுதி நேர உறுப்பினர்கள் மற்றும் முழுநேர உறுப்பினர்களின் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு 31—10—1984 அன்றுடன் முடிக்கப்பட்டு விட்டன. 1986 ஆம் ஆண்டு முதல் சில கூடுதல் பணிகள் மாநிலத் திட்டக் குழுவின் பொறுப்பிற்கு விடப்பட்டன. இக்கூடுதல் பொறுப்புகள் மற்றும் மாநிலத் திட்டக் குழுவின் பணிகளின் விவரங்களடங்கிய அறிக்கை† மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்கு சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டு உள்ளது. இப்பணிகளை செயல்படுத்த மாநிலத் திட்டக் குழுவின் அமைப்பை மாற்றி அமைக்கும் அவசியம் ஏற்படின், மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, மாநிலத் திட்டக் குழு திட்டங்களை இறுதியாக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கின்ற வகையில் அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. பொறுப்புகள் அதிகமாக உள்ள இந்தக் குழுவின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா?

---

† 348 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

1987 மார்ச் 23]

மேலும், குழுவிலே உறுப்பினர்களை நியமிக்கும்போது பொருளாதார நிபுணர்கள் இடம்பெறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இந்தக் குழுவிலே காலியாக உள்ள இடங்களுக்குத் தகுதியானவர்களை நியமிக்க அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, திட்டங்கள் மக்களிடமிருந்துதான் உருவாக வேண்டும். அதன் பிறகு அதிகாரிகள் அவற்றைச் செயல்படுத்த வேண்டும். அப்படி இருந்தால்தான் திட்டங்களுடைய பயன்கள் மக்களுக்குப் போய் சேரும், நன்மை ஏற்படும் என்பது பொதுவான விதி. அந்த வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விவர அறிக்கையில் மாவட்டத் திட்டப் பிரிவுகள் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படித் திட்டப் பிரிவுகளை அமைக்கின்றபோது அந்தப் பிரிவுகளுடைய பணிகள் என்னவாக இருக்கும் என்று தெரிவித்தால் இந்த அவைக்கு நல்ல தகவலைக் கொடுத்ததாக இருக்கும். அந்தப் பிரிவுகள் மக்களிடமிருந்து திட்டங்கள் உருவாகிற வகையில் பணிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தற்போது பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், நீலகிரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் திட்டப் பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற மாவட்டங்களிலும் இந்த மாதிரி படிப்படியாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மக்களிடமிருந்து எந்தத் திட்டம் தேவை என்று அறிந்து, மேலே அனுப்புவதுதான் மாவட்ட அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிற திட்டப் பிரிவுகளின் பணியாக இருக்கும்; அந்த வகையில்தான் திட்டப் பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-லிருந்து திட்டக் குழுவிற்கு Non-official members இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

குறிப்பிட்டார்கள். எந்த அடிப்படையில் Non-official members நியமிக்கப்படுவார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். மேலும் டிஸ்ட்ரிக்ட் ப்ளானிங் செல்லிலே எந்த வகையில் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனியாக வினா போடும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் வெளிநாட்டு இந்தியர் மூலம் ஓட்டல்கள்.

139—(*வினா எண் 11887) **திரு. டி. ஆர். வேங்கடரமணன்):** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் வெளிநாட்டு இந்தியர் மூலம் ஹோட்டல் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்களின் முதலீட்டுடன் அவர்கள் பங்கேற்கும் கூட்டுத் திட்டங்களாக சென்னை வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள இடத்திலும், வேப்பேரியில் கண்ணப்பர் திடலை ஒட்டியுள்ள இடத்திலும் நட்சத்திர ஓட்டல்கள் கட்ட திட்டமிட்டு இருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஓட்டல்களைக் கட்டுவதற்கு யார், யாருக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறது? எத்தனை காலத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு என்ன ரூபாய் முதலீடு செய்யப்பட இருக்கிறது? இதில் தமிழக அரசு ஏதாவது முதலீடு செய்ய இருக்கிறதா?